# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## லசாலியன் சமூக கல்விச் சேவைகள் (கூட்டிணைத்தல்)

**லசாலியன் சமூக கல்விச் சேவைகளைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

*நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ கே. கே. பியதாச அவர்களால் 2016, ஒகத்து மாதம் 09 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது.*

*(2016, யூலை மாதம் 11 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ *127 ஆம் சட்டமூலம்* ]

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*
*கொழும்பு 05, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

## லசாலியன் சமூக கல்விச் சேவைகளைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

"லசாலியன் சமூக கல்விச் சேவைகள்" என அழைக்கப்படுவதும், அறியப்படுவதுமான அமைப்பொன்று, சொல்லப்பட்ட அமைப்பின் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க அமைப்பின் குறிக்கோள்களையும் அதனுடன் தொடர்புடைய அனைத்துக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டு நடாத்தும் நோக்கத்திற்காக இற்றைவரை இலங்கையில் தாபிக்கப்பட்டிருந்ததாதலாலும் : முன்னுரை.

சொல்லப்பட்ட அமைப்பானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம், 2016 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, லசாலியன் சமூக கல்விச் சேவைகள் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். சுருக்கப்பெயர்.

**2.** இச்சட்டம், தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதன்பின்னர் "அமைப்பு" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) லசாலியன் சமூக கல்விச் சேவைகள் அமைப்பில் தற்போது உறுப்பினர்களாக உள்ளவர்களும், இத்தால் உருவாக்கப்படுகின்ற கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன்பின்னர் சேர்த்துக் கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) "லசாலியன் சமூக கல்விச் சேவைகள்" எனும் பெயர்மகுடத்தின் கீழ் இடையறாவழியுரிமைகொண்ட லசாலியன் சமூக சேவைகள் கூட்டிணைத்தல்.

கூட்டுத்தாபனமாதல் வேண்டுமென்பதோடு, சொல்லப்பட்ட கூட்டுத்தாபனத்தினாலும் அதற்கெதிராகவும் அப்பெயர்கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கவும்படலாம். மேலும் கூட்டுத்தாபனமானது, பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் அது விரும்பியாங்கு அந்த இலச்சினையை மாற்றவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் உடையதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3**. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாக இருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) பாடசாலைக் கல்வியை முடிவுறுத்திய 16 - 25 வயதுக்கு இடைப்பட்ட இளைஞர், யுவதிகளுக்கு தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை (NAITA), மூன்றாம்நிலை மற்றும் வாழ்க்கைத்தொழிற் கல்வி ஆணைக்குழு (TVEC) மற்றும் வாழ்க்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபையுடன் (VTA) இணைந்து தொழிற்பயிற்சியைப் பெற்றுக்கொடுத்தல் ;

(ஆ) வறிய பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு பாலர் பாடசாலைச் சேவையைப் பெற்றுக்கொடுத்தல் ;

(இ) போதைப்பொருட்களுக்கு புதிதாக பழக்கப்படுகின்றவர்களுக்கு புனர்வாழ்வளிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் ;

(ஈ) பின்தங்கிய சமூகத்திலுள்ள குடிசைவாழ் மக்களின் பாடசாலை செல்லாத பிள்ளைகளுக்கு கல்வி புகட்டுதல் ;

(உ) வறுமையின் காரணமாக பசியில் வாடுகின்ற பாடசாலை செல்லாத பிள்ளைகளுக்கு உணவு, பானங்களைப் பெற்றுக்கொடுத்து உடல் வளத்தை மேம்படுத்தி அவர்களை கல்வியின்பால் ஈடுபாடுகொள்ளச் செய்தல் ;

(ஊ) பிள்ளைகளை முன்னிட்டான சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் (CFCD) ஊடாக சிறுவர்களை ஈடுபடுத்தி நிகழ்ச்சித்திட்டங்களை குழுக்களாக நடைமுறைப்படுத்தல் மற்றும் அவர்களை சிறந்த வளர்ந்தோர்களாக மேம்பாடடையச் செய்தல் ;

(எ) குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கான போசணை நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல் ;

(ஏ) உளரீதியில் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களுக்கு உசிதமான கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை குழுக்களாக நடைமுறைப்படுத்தல் ;

(ஐ) வறிய பெற்றோருக்கு கடன் உதவி மற்றும் அவசியமான மதியுரைச் சேவைகளை வழங்கி சுயதொழில் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல், (சுய உதவிக் குழுக்கள்)

(ஒ) மத, கலாசார, விளையாட்டு ஆகிய செயற்பாடுகளின் ஊடாக மாணவ மாணவிகளுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுவான தத்துவங்கள்.

**4**. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அமைய -

(அ) உள்நாட்டு அல்லது வெளிநாட்டு மூலங்களிலிருந்து பணத்தின் மூலம் அல்லது வேறுவிதத்தில் கிடைக்கப்பெறும் அளிப்புகள், கொடைகள் அல்லது நன்கொடைகளை பெறுவதற்கும் ;

(ஆ) இணையான குறிக்கோள்களைக்கொண்ட ஏதேனும் வெளிநாட்டு அல்லது உள்நாட்டு அமைப்புக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்வதற்கு மற்றும் உதவிகளைப் பெறுவதற்கும் ;

(இ) பணிப்பாளர் சபை தீர்மானிக்கின்றவாறு கூட்டுத்தாபனத்தின் நிதியங்களை அல்லது சொத்துக்களை முதலீடு செய்வதற்கு, மீளப்பெறுவதற்கு அல்லது மீள முதலீடு செய்வதற்கும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் பணிகளை மேற்கொள்வதற்காக பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்படுகின்றவாறு அலுவலர்கள் மற்றும் ஊழியர்களை நியமிப்பதற்கு, சேவையில் ஈடுபடுத்துவதற்கு, அவர்களுக்கு சம்பளம் அல்லது கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கு, அவர்களது ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் சேவையிலிருந்து நீக்குவதற்கும் ;

(உ) செலாவணி உண்டியல்கள், காசோலைகள், வாக்குறுதிச் சீட்டுகள் மற்றும் ஏனைய கொடுக்கல் வாங்கல் செய்யக் கூடிய சாசனங்களை ஆக்குவதற்கு, வரைவதற்கு, பெறுவதற்கு, ஏற்பதற்கு, கழிவு வழங்குவதற்கு, புறக்குறிப்பிடுவதற்கு, கொடுக்கல் வாங்கல் செய்வதற்கு, கொள்வனவு செய்வதற்கு, விற்பனை செய்வதற்கு மற்றும் வழங்குவதற்கும், இலங்கையினுள் அல்லது வெளியிடங்களில் வங்கிக் கணக்குகளைத் திறப்பதற்கு, பேணிவருவதற்கு மற்றும் மூடிவிடுவதற்கும் ;

(ஊ) பிணையுடன் அல்லது பிணையின்றி பணம் கடன் பெறுவதற்கு அல்லது நிதியைப் பெறுவதற்கு ;

(எ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களைக் கொண்டு நடாத்துவதற்கு இடைநேர்விளைவான அல்லது உசிதமான ஏனைய அவ்வாறான அனைத்துச் செயல்களையும் விடயங்களையும் செய்வதற்கும்.

கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும்.

**5**. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மற்றும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கிணங்க மாகாண முதல்வர் அருட் சகோதரரால் தெரிவுசெய்து நியமிக்கப்படும் பணிப்பாளர் சபையினால் முகாமைத்துவம் செய்யப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது பணிப்பாளர் சபையானது, இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று அமைப்பின் பணிப்பாளர் சபையில் உறுப்பினர்களாக இருந்தோரை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

(3) அமைப்பின் தற்போதைய நிறைவேற்றுப் பணிப்பாளர் கூட்டுத்தாபனத்தின் முதலாவது நிறைவேற்றுப் பணிப்பாளராதல் வேண்டும். அதன் தற்றுணிபின் பிரகாரம் அனைத்து சேவைகள் மற்றும் அபிவிருத்திப் பணிகளும் நிறைவேற்றப்படுதல் வேண்டுமென்பதோடு, டி லாசால் சபையின் மாகாண முதல்வர் அருட்சகோதரரின் தற்றுணிபின் பிரகாரம் நியமிக்கப்பட்டுள்ள மேற்கூறப்பட்ட பதவியின் பணிகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றுவதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்கப்படுதலும் வேண்டும்.

**6**. (1) ஏதேனுமொரு பொதுக்கூட்டத்தில், சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றிலிரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப்பெரும்பான்மைகொண்டு, பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்கும் அல்லது எவற்றுக்கும் இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனுமொரு சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளை காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டுதாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

(அ) உறுப்பினர்களை வகைப்படுத்தல், உறுப்பினர்களை சேர்த்தல், அவர்களது பதவி விலகல் அல்லது அவர்களை விலக்குதல் ;

(ஆ) பணிப்பாளர் சபை அங்கத்தவர்களை தெரிவுசெய்து நியமித்தல், அவர்களது பதவி விலகல் அல்லது பதவியை வறிதாக்கல் அல்லது பதவியிலிருந்து நீக்குதல் மற்றும் அவர்களது தத்துவங்கள், நடத்தை மற்றும் கடமைகள் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்களது, முகவர்களது மற்றும் ஊழியர்களது தத்துவங்கள், நடத்தை, கடமைகள் மற்றும் பணிகள்;

(ஈ) பணிப்பாளர் சபைக் கூட்டங்களைக் கூட்டுதல் மற்றும் கூட்டத்தில் கடைப்பிடிக்கவேண்டிய நடைமுறைகள், அத்தகைய கூட்டங்கள் கூட்டப்படும் நேரம், இடம் மற்றும் கூட்டம் பற்றிய அறிவித்தல் மற்றும் நிகழ்ச்சிநிரல் மற்றும் அத்தகைய கூட்டங்களில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் ஆதனங்களின் நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் ; மற்றும்

(ஊ) பொதுவாக கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமைத்துவம் செய்தல் மற்றும் அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுதல்.

(2) கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்பட்ட விதி எதுவும் (1)ஆவது உபவிதியின்கீழ் ஆக்கப்பட்ட விதியைப்போன்று அதேபோன்றதொரு கூட்டத்திலும் அதேமுறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம், அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தொழுகுதல் வேண்டும்.

**7.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் கூட்டுத்தாபனத்தின்பேரில் நன்கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு, அன்பளிப்பு, மாற்றல்கள், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது அளிப்புக்கள் என்றவாறாகக் கிடைக்கப்பெற்ற அல்லது இதன்பின்னர் கிடைக்கப்பெறும் எல்லாப் பணங்களும் கூட்டுத்தாபனத்தின் நிதியத்தின் சார்பில் பணிப்பாளர் சபையால் தீர்மானிக்கப்படும் ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின்பேரில் வைப்பிலிடப்படுதல் வேண்டும். கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

(2) கூட்டுத்தாபனத்தின் ஆதனங்களை மேம்படுத்துவதற்கும், அபிவிருத்தி செய்வதற்கும் அல்லது மறுசீரமைப்பதற்குமாகக் கூட்டுத்தாபனம் ஏதேனும் தேய்மான நிதியத்தை அல்லது கடனாழ் நிதியத்தை உருவாக்கலாம்.

(3) கூட்டுத்தாபனம் அதன் தத்துவங்களையும் கடமைகளையும் மற்றும் பணிகளையும் செயற்படுத்தும்பொருட்டும் நிறைவேற்றும் பொருட்டும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட எல்லாச் செலவுகளும் கூட்டுத்தாபனத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் கணக்குகளும் கணக்காய்வும்.*

**8.** (1) கூட்டுத்தாபனத்தால் பெறப்பட்ட அனைத்து பணங்கள் மற்றும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட அனைத்து செலவுகள் தொடர்பாகத் தகுந்த கணக்குப் பதிவுகளைப் பேணிவருவதற்கு பணிப்பாளர் சபை நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள், பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்படும் கணக்காய்வாளர் ஒருவர் அல்லது கணக்காய்வாளர்கள்மூலம் குறைந்தபட்சம் ஆண்டுக்கு ஒருதடவையாவது கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

*அமைப்பினால் செலுத்தப்பட வேண்டிய மற்றும் அதற்கு வருமதியாகவுள்ள கடன்கள்.*

**9.** இச்சட்டம் நடைமுறைக்குவரும் தினத்திற்கு நேர்முந்திய நாளன்று உள்ளவாறான அமைப்பின் எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் இத்தால் கூட்டிணைக்கப்படுகின்ற கூட்டுத் தாபனத்தால் செலுத்தித் தீர்க்கப்படுதல் வேண்டுமென்பதோடு, அத்தினத்தன்று அமைப்பிற்கு செலுத்தப்படவுள்ளதான எல்லாக் கடன்களும் மற்றும் செலுத்தப்படவுள்ள சந்தாப் பணங்கள் மற்றும் உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களை வைத்திருத்தல்.*

**10.** ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, குத்தகைக்குப் பெறுதல், கொடை ஏதேனும் உடன்படிக்கைமீது அல்லது மரணசாசனக்கையளிப்புமூலமாகவோ அல்லது வேறுவகையிலோ கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதனையும் பெறவும் அல்லது வைத்திருக்கவும்

கூட்டுத்தாபனம் சட்டப்படி தத்துவம் பெற்றதாதலும் இயலுமான தாதலும் வேண்டுமென்பதோடு அத்தகைய ஆதனம் யாவும், இச்சட்டத்தின் பணிகளின்பொருட்டு கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும். மேலும், கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமைய அத்தகைய ஆதனங்களை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்கவுள்ள முழுத்தத்து வத்தையும் கூட்டுத்தாபனம் கொண்டிருத்தலும் வேண்டும்.

*கலைப்பின் போது எஞ்சியுள்ள ஆதனங்கள்.*

**11.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்பின்னர் அதன் அனைத்துக் கடன்களும், பொறுப்புக்களும் செலுத்தித் தீர்க்கப்பட்டதன் பின்னர் எவ்விதத்திலானதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின் அவ்வாதனம் டி லாசால் சபையின் மாகாண முதல்வர் அருட்சகோதரருக்கு உரித்தாதல் வேண்டுமென்பதோடு, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களுக்குச் சமமான குறிக்கோள்களைக் கொண்டதும் ஏதேனுமொரு வருமானத்தை அல்லது ஆதனத்தைத் தமது உறுப்பினர்களிடையே பகிர்ந்தளித்தல் அதன் விதிகளினால் தடைசெய்யப்பட்டுள்ளதுமான வேறேதேனும் ஒரு நிறுவனத்துக்கு அல்லது நிறுவனங்களுக்கு அத்தகைய ஆதனம் வழங்கப்படுவதற்கு அல்லது ஒப்படைக்கப்படுவதற்கு இயலுமானதாதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**12.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரின் பொறுப்பில் காணப்படுதல் வேண்டுமென்பதோடு, அது நிறைவேற்றுப் பணிப்பாளரால் மற்றும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமைய பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணல்.*

**13.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரச கூட்டிணைக்கப்பட்ட குழுவினதும் உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும் அவர்களின்மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருகின்றவர்கள் தவிர்ந்த வேறெவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**14.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும்பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்